பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கை நிறைவேறியது!

# காட்பாடியில் மற்றொரு இரயில்வே மேம்பாலம் புதிதாக அமைக்கப்படும்!

## நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அறிக்கை!

காட்பாடி, அக்.7 -

பொதுமக்களின் நீண்டநாள் கோரிக்கை நிறைவேறும் வகையில் காட்பாடியில் இன்னொரு ரயில்வே மேம்பாலம் புதியதாக அமைக்கப்படும் என்று கழகப் பொதுச் செயலாளரும், நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

கழக ஆட்சி அமையும் போதெல்லாம் தொடர்ச்சியாக பல வளர்ச்சித் திட்டங்களை பெற்று வருவது காட்பாடி தொகுதியாகும்.

1. பொன்னை மேம்பாலம், 2. திருவலம் சர்க்கரை ஆலை, 3. குடிக்க பாலாற்று தண்ணீர் (இப்போது காவிரி தண்ணீர்), 4.திருவள்ளுவர் பல்கலைக்கழகம், 5. காட்பாடியை தனி தாலுக்காவாக உருவாக்கியது, 6.நீதிமன்றங்கள், 7. சட்டக்கல்லூரி, 8. தீயணைப்பு நிலையம், 9. போக்குவரத்து காவல் நிலையம், 10.ஆரம்பப் பள்ளிகள், 11. மேல்நிலைப் பள்ளிகள், 12.உயர்நிலைப் பள்ளிகள், 13. காட்பாடியை வேலூருடன் இணைக்க விருதம்பட்டிற்கு அருகில் ஒரு பாலம், 14.அம்முண்டிபூட்டுத்தாக்கு பாலாற்று பாலம், 15.திருவலத்தில் பொன்னை ஆற்றின் மீது NH பாலம், 16.பல்வேறு அரசு அலுவலகங்கள், கலைஞர் காலத்தில் இப்படி பல திட்டங்களை பெற்றது காட்பாடி தொகுதியாகும்.

இன்றைய முதல்வர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆட்சியில்,



1. பொன்னையாற்றில் ஒரு மேம்பாலம், 2. பரமசாத்து, குகையநல்லூர், சேண்பாக்கம், அரும்பருத்தி போன்ற இடங்களில் தடுப்பணைகள், 3. மேல்பாடி அருகில் பொன்னையாற்றின் குறுக்கே ஒரு மேம்பாலம், 4. சேர்காட்டில் 100 படுக்கைகளை கொண்ட ஒரு நவீன மருத்துவமனை, 5. ஆண்கள் கலைக் கல்லூரி, 6. இந்த ஆண்டு வரப்போகிற SIPCOT தொழிற்சாலை, 7. காங்கேயநல்லூர்சத்துவாச்சாரி பாலாற்று பாலம்., 8. கல்புதூர்ஆரப்பாக்கம் (இரத்தினகிரி) வேலூர் சுற்றுவட்ட சாலை,

இப்படிஎண்ணற்றதிட்டங்களை பெற்று வந்த காட்பாடி தொகுதிக்கு இன்றைக்கு இன்னுமோர் அரிய பெரிய திட்டம் கொண்டுவரப் பட்டுள்ளது.

ஒரு காலத்தில் இரயில் பாதையால் இரண்டாக பிளவுபட்டிருந்த ஊர் காட்பாடி. பின்னர் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் அந்த மக்களின் போக்குவரத்திற்காக தொங்கு பாலம் போன்று ஒரு பாலத்தை கட்டினார்கள். அந்தப் பாலத்தின் மீது பெரிய வாகனங்கள் போகிறபொழுது அந்த பாலம் ஊஞ்சலாடும். அந்த பாலத்தின் ஓரத்தில் நடந்து போகிற மக்கள் பிடித்துக் கொள்ள எந்த பிடிமானமும் இருக்காது. உயிரை கையில் பிடித்துக் கொண்டு தான் அந்த பாலத்தை கடப்பார்கள்.

பிறகு, கலைஞர் ஆட்சிக்கு வந்த பிறகு அந்த பாலத்தை நவீனமாக்கி இரு வழி பாதையாக கட்டிக் கொடுத்தார்.

ஆனாலும், வளர்ந்துவரும் வாகனங்களின் எண்ணிக்கையால் அந்த பாலத்தில் அதிகமாக போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. எனவே, அந்த போக்குவரத்து நெரிசலை குறைக்க இன்னுமொரு பாலம் அமைந்தால் நன்றாக இருக்கும் என்று பொதுமக்கள் நீண்ட காலமாக ஒரு கோரிக்கை வைத்திருந்தார்கள்.

மக்களின் கோரிக்கையை ஏற்று, பழைய பாலத்திற்கு பக்கத்திலேயே சுமார் 25 கோடி ரூபாய் செலவில் இன்னொரு இருவழிப் பாதை கோரப்பட்டுள்ளது. மேம்பாலம் கட்டுவதற்கு Tender கோரப்பட்டுள்ளது. இந்தப் பாலத்தை கட்டி முடித்து பயன்பாட்டிற்கு வரும் போது காட்பாடி இரயில்வே பாலத்தின் மீது தற்போது ஏற்படுகிற நெரிசல் முழுவதுமாக குறையும்.

இவ்வாறு பொதுச் செயலாளர் - நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் தெரிவித்துள்ளார்.





கேரள மாநிலம் கோழிக்கோட்டைச் சேர்ந்த வெளிமன்னா, தம்மை போல மாற்றுத் திறனுள்ள குழந்தைகளின் உரிமைக்காக தொடர்ந்து குரல் கொடுப்பதன் மூலம் உலக அளவில் அறிமுகமாகி அதன் மூலம், பல்வேறு அங்கீகாரங்களை பெற்றவராவார். சென்னை வருகை தந்துள்ளதை தொடர்ந்து குடும்பத்தாருடன் நேற்று முன்தினம் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை சந்தித்தார். அப்போது அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாற்றுத் திறனாளிகளின் நலன் சார்ந்து அவர் எடுத்து வரும் முன்னெடுப்புகளை கேட்டறிந்து அவருடைய பணிகள் சிறக்க வாழ்த்துத் தெரிவித்தார்.

டெல்டா மாவட்டங்களில் போதிய நீரின்றி பாதிக்கப்பட்ட

# விவசாயிகளுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.13,500 இழப்பீடு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, அக்.7 -

காவிரி ஆற்றில், கர்நாடக மாநிலத்திலிருந்து போதிய அளவு தண்ணீர் பெறப்படாததால், டெல்டா மாவட்டங்களில் குறுவை பயிர் சாகுபடி பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கிட தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

தமிழ்நாட்டில் டெல்டா மாவட்ட விவசாயிகள் பயன்பெறும் வகையில், குறுவை சாகுபடி செய்வதற்கு ஏதுவாக, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் 12-6-2023 அன்று மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்து வைக்கப்பட்டது. ஆனால், காவிரி ஆற்றில் கர்நாடக மாநிலத்திலிருந்து போதிய அளவு தண்ணீர் தொடர்ந்து பெறப்படாத காரணத்தால், மேட்டூர் அணையிலிருந்து விவசாயத்திற்கு போதிய அளவு தண்ணீர் திறந்து விட இயலாத நிலையில், தற்போது டெல்டா மாவட்டங்களில் ஏறத்தாழ 40 ஆயிரம் ஏக்கர் பரப்பில் பயிரிடப்பட்டுள்ள நெற்பயிர்கள் வாடிய நிலையில் பாதிக்கப்பட்டுள்ளது.

பயிர் பாதிப்பு விவரங்கள் முறையாக கணக்கிடப்பட்டு, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.13,500/- இழப்பீடாக வழங்கிட தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (5-10-2023) உத்தரவிட்டுள்ளார்கள்.

கடலூர் பதிவு மண்டலத்திற்குட்பட்ட

# சார்பதிவாளர்களின் பணித்திறன் குறித்த சீராய்வுக் கூட்டம்!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் - பி.மூர்த்தி தலைமையில் நடைபெற்றது!

கடலூர், அக். 7 -

கடலூர், மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஆகியோர் தலைமையில் அரசு செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை திருமதி. பா.ஜோதிநிர்மலாசாமி, பதிவுத்துறைத்தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்அ.அருண் தம்புராஜ், ஆகியோர் முன்னிலையில் கடலூர் பதிவு மண்டலத்திற்குட்பட்ட சார்பதி வாளர்களின் பணித்திறன் தொடர்பான மண்டல சீராய்வு கூட்டம் 5ந் தேதி நடைபெற்றது.

அமைச்சர் பெருமக்கள் தெரிவித்ததாவது :

பதிவுத்துறையானது அரசின் முக்கியமான வருவாய் தரும் துறைகளில் ஒன்றாக உள்ளதால், தமிழக அரசின் பல்வேறு அரசு நல திட்டங்களுக்கு மூல ஆதாரமாக பதிவுத்துறை செயல்பட்டு வருவதாக தெரிவித்தார். மேலும் சார்பதிவாளர்கள் தங்களது பணியில் சிறப்பாக செயல்பட்டு அரசு நிர்ணயித்த வருவாய் இலக்கினை அடைய முழு முயற்சியுடன் செயல்பட வேண்டும் எனவும், பதிவுத்துறையின் சேவையை நாடிவரும் பொது மக்களுக்கு உடனுக்குடன் அவர்களது தேவையை பூர்த்தி செய்யும் வகையில் விரைவாக செயல்பட வேண்டும் என அறிவுறுத்தினார்.

சார்பதிவாளர்கள் அனைவரும் வருவாய் இலக்கினை அதிகரிக்கும் நோக்கத்தோடு செயல்படவும், ஆவணப்பதிவின் போது உரிமையாளர்களை கண்டறிந்து போலி ஆவணங்கள் பதிவு செய்யப்படுவதை முற்றிலும் தவிர்க்கவும், கட்டடங்களை மறைத்து அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படாத வண்ணம் பதிவுத்துறை தலைவர் அவர்களால் பிறப்பிக்கப்பட்ட சுற்றறிக்கைகளைப் பின்பற்றி செயல்படவும், பொதுமக்களுக்குத் தேவையான சேவைகளை அரசால் நிர்ணயிக்கப்பட்ட காலவரையறைக்குள் செய்து முடித்திடவும் அறிவுறுத்தினார். மேலும் சார்பதிவகங்களுக்கு வழங்கப்பட்ட வருவாய் இலக்கினை முழுமையாக அடைந்திட பல்வேறு ஆலோசனைகளையும், வழிமுறைகளையும் இக்கூட்டத்தில் தெரிவித்தனர்.

இந்நிகழ்ச்சியில், நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா.இராஜேந்திரன், கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன், விருத்தாசலம் சட்டமன்ற உறுப்பினர் எம்.ஆர்.இராதாகிருஷ்ணன், கடலூர் மாநகராட்சி மேயர் திருமதி.சுந்தரிராஜா, மாநகராட்சி துணை மேயர் பா.தாமரைச்செல்வன் அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் ம.இராஜசேகரன், கடலூர் பதிவு மண்டல, துணைப்பதிவுத்துறை தலைவர் இரா. ஜனார்த்தனம் உள்ளிட்ட பதிவுத்துறை சார்ந்த அலுவலர்கள் பங்கேற்றனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆட்சியில் தமிழ்நாடு சட்டப்பேரவையில்

# ‘லாட்டிமர் ஹவுஸ்’ கோட்பாடுகள் கடைப்பிடிக்கப்படும்!

## கானா நாட்டின் காமல்வெல்த் மாநாட்டில் தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு பேச்சு!

அக்ரா (கானா நாடு), அக். 7 -

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆட்சியில் தமிழ்நாடு சட்டப் பேரவையில் சட்டமன்றம், நீதிமன்றம் மற்றும் நிர்வாகம் தொடர்பான லாட்டிமர் ஹவுஸ் கோட்பாடுகள் கடைப்பிடிக்க முயற்சி மேற்கொள்ளப்படும் என்று பேரவைத் தலைவர் மு.அப்பாவு பேசுவையில் குறிப்பிட்டார்.



தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் மு. அப்பாவு அவர்கள் 04.10.2023 அன்று கானா நாட்டில் நடைபெற்ற 66வது காமன்வெல்த் பாராளுமன்ற மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றினார். உடன், தமிழ்நாடு சட்டப்பேரவைச் செயலாளர் முனைவர் கி.சீனிவாசன் உள்ளார்.

காமன்வெல்த் பாராளுமன்ற சங்கத்தின் 66-வது மாநாடு, கானா நாட்டின் தலைநகர் அக்ரா நகரத்தில், அக்டோபர் திங்கள் 4 ஆம் நாள் நடைபெற்ற கருத்தரங்கில் பேரவைத் தலைவர் மு.அப்பாவு பேசியதாவது:

2003 ஆம் ஆண்டு சட்டமன்றம், நீதிமன்றம் மற்றும் நிர்வாகம் ஆகியவற்றில் அதிகார பகிர்வுகள் மற்றும் ஊடுருவல்கள் குறித்து லாடிமர் ஹவுஸ் கோட்பாடுகள் உருவாக்கப்பட்டதிலிருந்து, பல காமன்வெல்த் நாடுகளில் அதிகாரப் பகிர்வுகளை உறுதிப்படுத்துவதிலும், நல்லாட்சியை மேம்படுத்துவதிலும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என நான் கருதுகிறேன். இருந்த போதிலும், காமன்வெல்த் நாடுகள் பலவற்றிலும், இக்கோட்பாடுகளை கடைபிடிப்பதில், பல்வேறு சவால்கள் மற்றும் தடைகள் நீடிக்கின்றன, மேலும், இந்த கோட்பாடுகள் காமன்வெல்த் நாடுகளில் ஜனநாயக வளர்ச்சி மற்றும் நிர்வாகத்தை தொடர்ந்து வழிநடத்துவதை உறுதி செய்ய தொடர்ந்து முயற்சிகள் தேவை. ஒவ்வொரு உறுப்பு நாடுகளிலும் குறிப்பிட்ட வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் பரவலாக வேறுபடலாம், மேலும், 2023-ல் இந்த கோட்பாடுகளின் நிலை ஒவ்வொரு நாட்டின் தனிப்பட்ட சூழ்நிலைகளைப் பொறுத்தது என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டியது அவசியம்.

தமிழ்நாட்டில் 5 முறை முதலமைச்சராக பொறுப்பேற்று, செம்மையாக ஆட்சி செய்து, தான் போட்டியிட்ட 13 சட்டமன்றத் தேர்தல்களிலும் வெற்றிபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் நேரத்தில், திறமையான நிர்வாகத்தை வழங்கி, தமிழ்நாடு முன்னேற்றத்திற்கான வளர்ச்சிப் பணிகளை நாள்தோறும் வழங்கிவரும், நமது அன்புக்குரிய தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆட்சிக்காலத்தில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளில் லாட்டிமர் ஹவுஸ் கோட்பாடுகளை கடைப்பிடிக்க அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறேன்.

மேலும், சட்டமன்றம், நீதிமன்றம் நிர்வாகம் ஆகிய ஒவ்வொரு பிரிவும் ஒன்றோடொன்று இணைந்து செயல்படும் என உறுதியாக நம்புகிறேன்.

இந்த மாநாட்டில் பங்கேற்க எனக்கு வாய்ப்பு கிடைத்தது குறித்து என்னுடைய மகிழ்ச்சியை தெரிவித்துக்கொள்வதோடு, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு எனது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் பேசினார்.

# சிசோடியா மீதான புகாருக்கு ஆதாரம் எங்கே?

## உச்ச நீதிமன்றம் கேள்வி!

புதுடெல்லி, அக். 7 -

டெல்லியில் ஆளும் ஆம் ஆத்மி அரசு கடந்த 2021-ல் புதிய மதுபான கொள்கையை அமல்படுத்தியது. இதில் முறைகேடு நடந்ததாக புகார் எழுந்தது. இதையடுத்து, சி.பி.ஐ., அமலாக்கத் துறை ஆகியவை தனித் தனியாக வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றன.

இந்த வழக்கில் டெல்லி முன்னாள் துணை முதல்வர் மணிஷ் சிசோடியா உள்ளிட்ட சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்நிலையில், மணிஷ் சிசோடியா தாக்கல் செய்த ஜாமீன் மனு, உச்சநீதிமன்றத்தில் நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது. அப்போது, சி.பி.ஐ. மற்றும் அமலாக்கத் துறை சார்பில் ஆஜரான வழக்கறிஞர்களிடம் நீதிபதிகள் கூறியதாவது:

டெல்லி மதுபான கொள்கை விவகாரத்தில் லஞ்சம் கைமாறியதாக கூறுகிறீர்கள்.

யார் அதை வழங்கினார்கள்? இந்த வழக்கில் மணிஷ் சிசோடியா மீதான புகாருக்கு ஆதாரம் எங்கே?

தினேஷ் அரோரா என்பவரின் வாக்குமூலத்தைத் தவிர வேறு ஏதாவது ஆதாரமோ, ஆவணமோ இருக்கிறதா?

சட்டவிரோத பணப்பரிவர்த்தனை தடுப்பு சட்டத்தின் கீழ் இவர் மீது எப்படி குற்றம்சாட்டுகிறீர்கள்?

இவ்வாறு அடுக்கடுக்கான கேள்விகளை நீதிபதிகள் எழுப்பினர்.



மதுரை மன்னர் திருமலை நாயக்கர் அரண்மனையில் மேற்கொள்ளப்பட்டு வரும் புனரமைப்பு பணிகளை பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்த போது எடுத்தபடம். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் சங்கீதா, சட்டமன்ற உறுப்பினர்கள் கோ.தளபதி, பூமிநாதன், ஆ.வெங்கடேசன், மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன் மற்றும் அதிகாரிகள் உள்ளனர்.



நேற்று முன்தினம் (05.10.2023) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கோயம்புத்தூரில் 21.10.2023 மற்றும் 22.10.2023 ஆகிய இரண்டு நாட்கள் நடைபெறவுள்ள தமிழ்நாடு சைக்கிளிங் லீக் போட்டிக்காக ”தமிழ்நாடு சாம்பியன்ஸ்” அறக்கட்டளை சார்பில் ரூ.5 இலட்சத்திற்கான காசோலையினை போட்டி நடத்தும் அமைப்பாளர்களிடம் சென்னை முகாம் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கி, போட்டிக்கான கோப்பை, இலச்சினை மற்றும் டீ-ஷர்ட்களை அறிமுகப்படுத்தினார். இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, அரசு உயர் அலுவலர்கள் மற்றும் அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.